

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

When only The best is Good Enough

Buy
Solide Pumps

சுடர்: 5 சுக்கில ஹூ பங்குனி மீ 06 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 21 (19 - 03 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 37

# 6 ஆவது திருத்தம் நீக்கப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்

## நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அதனால் தீமை ஏற்படும் என அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 1)

**அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு நாடாளு மன்றத்தில் கொண்டு வரப்படும் சட்ட மூலம் எதனையும் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும்.**

**முஸ்லிம் காங்கிரஸினால் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

**ஆறாவது திருத்தத்தை நீக்கினால், அது இலங்கையின் ஒருமைப் பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

அரசமைப்பின் ஆறாவது திருத்தம் இலங்கையில் ஒற்றையாட்சி முறைக்கு விசுவாசமாக சத்தியப்பிரமாணம் செய்ய வலியுறுத்துகிறது என்பது தெரிந்ததே.

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள், தமது அமைப்பு ஜனநாயகத் தேர்தலில் பங்குபற்றுவதாயின் அதற்கு முன்னர் 6ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என நிபந்தனை விதித்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

அரசாங்கம் இதற்கு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் அதனை நீக்குவதற்கான சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசுக்கு நாடாளுமன்றத்தில் பலம் இல்லை.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்த விடயத்தில் ஏனைய தமிழ் கட்சிகளான ஈழவர் ஜனநாயக முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ உட்பட) ஆகியவற்றின் எம்.

(5ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப பின்னை இனி றோட்டிலை கொஞ்சம் நிம்மதியா போய் வரலாம் எண்டு சொல்லுங்கோ...!

## திருமலைக்கு தமிழ்ப் பொலீஸ்

கொழும்பு, மார்ச் 19

திருகோணமலைக்கு நூற்றுக்கும் அதிகமான தமிழ்ப் பொலீஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ - 150)

பொம்மைவெளியில் நேற்றிரவு:

## மின்கம்பி மீது அன்ரனா சரிந்ததில் இருவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 19

டெலிவிஷன் அன்ரனா சரிந்து மின்கம்பியில் விழுந்ததால் அன்ரனாவைப் பிடித்திருந்த இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இப்பரிதாபகரமான சம்பவம் நேற்றிரவு 8-45 மணியளவில் யாழ் பொம்மை

(6 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்கா அருகே கோர விபத்து:

## மோட்டார் சைக்கிளில் சென்ற அண்ணனும் தங்கையும் பலி!

கொழும்பு, மார்ச் 19

கட்டுநாயக்காவிற்கு அண்மையில் நேற்று இடம்பெற்ற மோசமான விபத்து ஒன்றில் மோட்டார்சைக்கிளில் வந்த ஒரு சகோதரனும், சகோதரியும் உயிரிழந்தனர். மேலும் 11பேர் படுகாயமடைந்தனர்.

11வருடங்களின் பின்னர் நாடு திரும்பும் தமது மாமனாரை வரவேற்க மோட்டார் சைக்கிளில் விமான நிலையம் சென்றவர்களே

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இறுதி இந்தியப்படை சனியன்று வாபஸ்!

## காங்கேசனிலிருந்து வியாழன் வெளியேறுவர்

திருகோணமலை, மார்ச் 19

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்திய அமைதிப்படையின் கடைசி துருப்பினர் இம் மாதம் 24 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் இருந்து தாயகம் திரும்புவர்.

இதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக காங்கேசன்துறையில் இருந்து அமைதிப்படையினர் வெளியேறிவிடுவர்.

அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எச். கல்கத் இந்தத் தகவல்களை நேற்று திருகோணமலையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அமைதிப்படை விலகலின் இறுதிக்கட்ட வேலைகள் ஆரம்பமாகி விட்டன என்றும் ஜெனரல் கல்கத் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில்கடந்தஇரண்டரை ஆண்டு கால நடவடிக்கையின் போது இந்தியஅமைதிப்படையினரில் ஆயிரம்பேருக்குமேல் உயிரிழந்தனர் 3 ஆயிரம் பேரளவில் காயமடைந்தனர்.

இரண்டரை ஆண்டுகால நடவடிக்கைகளின் போது இலங்கைப்படையினருக்கும் இந்தியப்படையினருக்கும் இடையே சுமுகமான உறவு

(5ஆம் பக்கம் பார்க்க)

## வருகிறது தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாண நகரில் தடை வருகிறது! எதற்கு?

வீதிகளில், அவற்றின் விசாலம் முழுவதையும் விசிறிபோட்டு கைகோர்த்தபடி குறுக்கு வரிசையாக சைக்கிளில் பயணம் செல்வதற்கே தடை வரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ராஜினாமாவை வாபஸ்பெற தேவிலால் ஒப்புதலாம்

புதுடில்லி, மார்ச் 19

துணைப்பிரதமர் திரு. தேவிலால் தனது ராஜினாமாவை வாபஸ் வாங்க ஒப்புக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ராஜினாமாவை வாபஸ் வாங்கும்படி பிரதமர் வி.பி. சிங் தேவிலாலுக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்தும் ஏனைய ஜனதாதள் தலைவர்களின் வற்புறுத்தலைத் தொடர்ந்தும் திரு. தேவிலால் பதவியில் நீடிக்க சம்மதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் ஜனதாதள் தலைவர் திரு. என்.ரி. ராமராவ் பிரதமர் சிங்கையும் தேவிலாலையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் திரு. ராமராவ் சொன்னதாவது:

தேவிலால் பதவி விலகல் தீர்ந்து விட்டது.

பிரதமர் வி. பி. சிங்குக்கும் திரு. தேவிலாலுக்கும் இடையே நல்லதொரு கருத்து உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அதுபற்றிய விவரங்களை நான் வெளியிடமாட்டேன்.

இது ஒரு குடும்ப பிரச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# 350 கிராம் பாண் - 4ரூபா 60 சதம்;

## விற்க அனுமதி கேட்கிறார்கள் பேக்கரிகாரர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

பாணின் நிறையை 350 கிராமாகக் குறைத்தும் அதனை 4ரூபா 60 சதமாகவும் விற்பதற்கு அனுமதி வழங்கும்படி கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினரால் நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இந்தக் கோரிக்கை வெளியிடப்பட்டது.

நேற்றையபத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ அண்மையில் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரீட்சார்த்த முயற்சியில் ஒரு றாத்தல் பாண் (450 கிராம் கொண்டது) தயாரிக்க 5ரூபா 67 சதம் செலவாகுவதாகக் கணக்கிடப்பட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவாக இன்றுமுதல் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதி நினைவாக வடக்கு, கிழக்கு தமிழ் பகுதிகளெங்கும் இன்று முதல் அடுத்த மாதம் 19ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்துக்கு நினைவுக் கொண்டாட்டங்கள் நடை

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாநகரப் பகுதியில் நாளை முதல் வீதி ஒழுங்கு நடை முறை அமுலாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாநகரசபைப் பகுதியில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வீதி ஒழுங்கு நடைமுறை அமுலுக்கு வரவிருக்கிறது.

நேற்றுக்காலை நாவலர் மண்டபத்தில் நடந்தவிசேட கலந்துரையாடலில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு மாநகரசபை ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம் தலைமை வகித்தார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. சண்முகம், தனியார் மினிபஸ் சங்கத் தலைவர் திரு. மதிமுகராசா உட்பட டாக்சி சாரதிகள், ஓட்டோ சாரதிகள் மற்றும் வர்த்தக, பொதுஜன அமைப்பு பிரதிநிதிகளும், மாநகரசபை அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் இன்னும் பலரும் கலந்து கொண்டனர்.

புதிய நடைமுறைகள் பற்றி ஆணையாளர் விளக்கியபின்பு, ஏனையோரின் கருத்துக்களின் படி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

வீதி ஒழுங்கு வேலைகளை மாநகரசபையின் 15 ஊழியர்கள் கவனிப்பார்கள். (ஓ-3)

## வீதி ஒழுங்கு பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ் நகரப்பகுதியில் நாளைமுதல் அமுலாக இருக்கும் வீதி ஒழுங்கு நடைமுறைகள் பற்றிய விவரம் வருமாறு:

காங்கேசன்துறையில் இருந்து வரும் மினிபஸ், இ.போ. ச. பஸ்கள் சிவன் கோவில் சந்தியால் வைத்தீஸ்வரா சந்தி சென்று பின் மாணிப்பாய் வீதியூடாக ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம்சந்தி, பருத்தித்துறை வீதி ஆஸ்பத்திரி வீதியூடாக மட்டுமே நகரத்துக்குள் செல்லமுடியும்.

அப்பகுதியால் வரும் தனியார் வாகனங்கள் கன்னாதிட்டி வீதியூடாக கஸ்தூரியார் வீதியால் ஸ்ரான்லி வீதியை அடைந்து ஆரியகுளம் ஊடாகவும், வெலிங்டன் சந்தியால் சென்று விக்ரோரியா வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக நகரத்துக்குள் செல்ல

( 5 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

19- 3 - 1990

திங்கட்கிழமை பங்குனி 6

சுபநேரம்:

12-19முதல் 01 -40 வரை

இராகுகாலம்-

7- 49 முதல் 9 -19 வரை

சிறில் ரணதுங்கா சொல்கிறார்:

## இடம் பெயர்ந்தோரை குடியமர்த்த புலிகள் முழு ஒத்துழைப்பு வழங்குவர்

கொழும்பு, மார்ச் 19

வடக்கு, கிழக்குப் பகுதியில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை மீண்டும் அவர்களது இடங்களில் குடியமர்த்தவும் -

அவர்களுக்குரிய புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் -

விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்துள்ளனர்.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

சிங்களப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவது குறித்து சிங்கள மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை. அவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகவே ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட மாட்டார்கள்.

- இப்படி ஜெனரல் ரணதுங்க மேலும் கூறியதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## திருமண அழைப்பிதழ்

திருமதி நடேசன்
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

திருமதி ராஜசிங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

மணமகன் இராகவன் ★★ மணமகள் ராஜலக்ஷ்மி

நாள்: 24 - 03 - 1990 (சனிக்கிழமை)

நேரம்: காலை 10.45 — பகல் 12 மணிவரை (கனடா நேரப்படி)

இடம்: Cedar Brook Community Centre
91, East Park Blvd, Scarborough.

14, Manston Crescent,
Markhan, Ont,
L3 R7 A1
Canada.

Bellechasse Street
Scarborough Ont,
M1 K2 G2
Canada.

[C-4048]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

**கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)**

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத் கறுப்பு வரிசேவல் (Lohmann) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் 21-3-1990 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய். இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) (12055)

**90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்**

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந் புத்தக சாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

**காஸ் குக்கர் திருத்த**

உங்களுடைய Gas குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா எதுவாயினும் மிகத் திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம் D. முஸ்தபா 38, 1ம் குறுச் குத் தெரு, யாழ்ப்பாணம். (2862)

### தேவை

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகை 1500/-க்குள் தேவை முற்பணம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு வி. இலக்கம் 108, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (12065)

நல்லூரிலிருந்து ஒரு மைல் சுற்றாடலுக்குள் நல்ல குடிநீருடன் வசதியான வீடு வாடகைக்குத் தேவை விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும் வி. இலக்கம் 107 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12063)

**மணமகன் தேவை**

அவுஸ்திரேலியாவில் குடியிருக்கும் யாழ்ப்பாண தமிழ் வேளாள கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். மணமகள் வயது 26 உயரம் 5' 5'' மாநிறம் பதவியினர் தரத்தில் வங்கியில் தொழில் பார்ப்பதுடன் மேற்படிப்பும் படிக்கிறார். பிறந்த திகதி, நேரம் பிறந்த நாடு போன்ற முழு விபரங்களுடன் விண்ணப்பிக்லாம். மே/பா, உதயன் இலக்கம் 109, யாழ்ப்பாணம். (12110)

**தவறிவிட்டது**

சிவகுரு தவராசா ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரமும், தேசிய அடையாள அட்டையும் 02-03- 90 அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (12062)

**SPOKEN ENGLISH**

ஆங்கிலம் இலகுவில் பேசப் பழக உதவும் கைநூல்கள் Series 1-7 தயாரிப்பு S.B. Iyar கிடைக்குமிடம் 12, வைமன் வீதி, நல்லூர். (11977)

**Typewriters**

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

**காணவில்லை**

நாகரத்தினம் தவமணியின் அடையாள அட்டை, அறிமுகஅட்டை, உணவுமுத்திரைகள் 10, 13- 03- 90 அன்று செஞ்சிலுவைச் சங்க காரியலாயத்திற்கு அண்மையில் தவறிவிடப்பட்டு விட்டது. கண்டெடுப்பவர்கள் சி. நாகரத்தினம் முருகமூர்த்தி கோவிலடி மல்லம், உடுவில் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (12067)

**சுருக்கெழுத்துப் பயிற்சி**

க. பொ. த. (சா. த) பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை விட்டு விலகியவர்களுக்கான தமிழ்/ஆங்கிலம் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள் (8 மாதம்) 1-4-90இல் ஆரம்பமாகிறது. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 25-3-90 க்கு முன்பு விண்ணப்பிக்கவும். புதிய யந்திரங்களில் பயிற்சியளிக்கப்படும். முகவரி:- செயலாளர், கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (2878)

**வகுப்புக்கள்**

Radio T. V. Air-Conditioning Refregeration, வயரிங், வெல்டிங், பைண்டிங், பிளம்பிங், மோட்ட மெக்கானிசம் Typing, Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை, அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கிகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (12064)

## கிறீஸ்தவக் கல்லூரி விளை. போட்டி

கோப்பாய் மார்ச் 19

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில்செல்லையாஇல்லம் முதல் இடத்தையும் பீற்றே இல்லம் இரண்டாவது இடத்தையும், நவரட்ணராஜா இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

அணிநடைப் போட்டியில் பீற்றோ இல்லம் முதல் இடத்தைப் பெற்றது (சு-72)


## வெற்றிடம்

★ சவர்க்காரம் செய்வதில் அனுபவம் உள்ளவர் தேவை.

★ அனுபவத்துக்கும் திறமைக்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.

நேரில் வரவும்:

★ த பெனின்சுலா குரூப் ★

அரஸ்கோ கட்டடம்
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[சி-4041]

## உங்கள் தேவை! எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகளுக்கு

"ஷப்றா" (சேவைப் பகுதி)

இல. 19, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


## பதவிகள் வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் புனருத்தாரண / சமூக அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தும் ஓர் ஸ்தாபனம், அதன் திட்டத்தில் பின்வரும் வெற்றிடங்கட்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகிறது.

1. நிர்வாக / கணக்கு உத்தியோகத்தர்
   தேவையான தகமைகள்
   - அ) சி. ஐ. எம். ஏ. பகுதி மூன்று அல்லது பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி அல்லது இதற்குச் சமமான ஏனைய கல்வித் தகமைகளுடன் குறைந்தது ஐந்து வருட அனுபவம்.
   - ஆ) காரியாலய நிர்வாகம், ஆளணி முகாமைத்துவம் பற்றிய அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
   - இ) கிராமிய கடன் திட்டங்கள் / வங்கி நடைமுறை சம்பந்தமான அனுபவம்.
2. சமூக அபிவிருத்தி இணைப்பாளர்கள்
   தேவையான தகமைகள்
   - அ) க. பொ. த. (உயர்தரம்)
   - ஆ) சமூக அபிவிருத்திப் பணியில் குறைந்தது ஐந்து வருட அனுபவம்.
   - இ) கூட்டுறவு வேலைத் திட்டங்களில் குறைந்தது இரண்டு வருட அனுபவம்.

விண்ணப்பங்கள் 31 - 03 - 1990க்கு முன்

**Resident Representative,**
**Forut,**
25, Havelock Road,
Colombo - 5

அனுப்பி வைக்கப்பட வேண்டும். (12113)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்லர் இரத்தினம்**

தோற்றம்: 08 - 04 - 1928
மறைவு: 30 - 03 - 1989

திதி: 19 — 03 — 1990

ஆண்டு பல சென்றாலும் அவனியிலே
நீண்டுவரும் உங்கள் நினைவலைகள்
தேறுதலைத் தருகின்ற வார்த்தையிலே அன்பூற்று
நேற்றுப் போல இருக்கிறது. இந்த நினைவோடு
காத்திருப்போம் உங்கள் நினைவுகளைத் தேக்கி

உங்கள் பிரிவால் வருந்தும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

''முருகன் இல்லம்''
கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.

[2782]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு**

(கணுக்கேணி தண்ணிரூற்று முன்னாள் கிராமசேவையாளர்)

படைப்பு: 29 - 03 - 1945
அழிப்பு: 19 - 03 - 1989

திதி: 07. 04. 1990

எம் இதய தீபமே! நீங்கள் மறைந்து ஒரு வருடம் ஓடிவிட்டதே; இன்னமும் ஆறவில்லை எங்கள் மனம், ஓயவில்லை எங்கள் கண்ணீர், எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய் வழி நடத்திய அன்புத் தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள்,
மருமக்கள், நண்பர்கள்.

15, பாடசாலை வீதி,
கரைச்சி குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(12033)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





சிவஸ்ரீ
**பொ. நடராஜக் குருக்கள்**
தோற்றம்: 03 - 03 - 1931
மறைவு : 19 - 03 - 1989

திருமதி
**கௌசல்யா நடராஜக் குருக்கள்**
மண்: 17 - 11 - 1940
விண்: 01 - 02 - 1989

அன்புதவழ் தந்தையே அழகொளிரும் திருவுருவே
காலன் வலைவிரிப்பால் எமைவிட்டு காததூரம் நீர் போனீரோ
விதியென்ற பாதகன் உள்ளே புற்றெடுத்துக் கொண்டதனால்
எம் தாயையும் நாம் இழந்தோம்
தாயை இழந்த துயரம் தாங்கும் சக்தி வரும் முன்னே
கதியென்று இருந்த எம் தந்தையே நீருமெமைப் பிரிந்ததனால்
தாங்குமோ எம் மனது தாங்காது கதறுகின்றோம்.

ஓர் ஆண்டாகிய இத்தினத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்:

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்.

கனகசபை றோட்,
மானிப்பாய்.

பி. கு. அன்புடையீர்! நிகழும் சுக்கில வருட பங்குனி மாதம் 25ஆம் நாள் (07-04-90) சனிக்கிழமை எமது பெற்றோருக்கு ஆண்டு திதி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

[2921]

## 100ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் மெண்டிஸ்**
**சின்னத்தம்பி தெய்வேந்திரபாலன்**

ஜனனம்: 17 - 02 - 1969
மரணம்: 09 - 12 - 1989

கூடிவந்த காலமதை, குவலயத்தில் மறப்போமா!
பழகிவந்த நாட்களும்,
உலவிவந்த வழிகளும் - எங்கள்
வழியில் அழியுமா........? நீ நீறாகி நூறாகியும்
களங்கண்டோர்க்கு களமமைத்தவனே! - எம்
கண்களை கலக்கிவிட்டு - நீ........
நீறாகி நூறாகியதோ!
அராஜகத்தின் அடாவடியில்
ஆக்கினைகள் பல பட்டு
துண்டு துண்டாகியவனே - நீ........
நீறாகி நூறாகியதோ!
நண்பா!
நாளைய விடியலில் - உன்
இலட்சிய முகம் மலர - நாம்
உயிருள்ளவரை உழைப்போதும் - உறுதி
நீறாகிய நூறிலே........!

— நண்பர்கள்

கைதடி மேற்கு

[12115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக் கொண் டன்னது உடைத்து.

**பொருள்:**

நோக்கிய அவள் பார்வைக்கு எதிரே நோக்குதல் தானே தாக்கி வருத்தும் அணங்கு, ஒரு சேனையையும் கொண்டு வந்து தாக்கினாற் போன்றது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
19-03-1990 த. பெ. இலக்கம் : 23

# நிவாரணம் படும்பாடு !

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக யாழ்ப்பாண வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிவாரணப்பணம் ஒன்பது கோடி ரூபா தேங்கிக் கிடக்கிறது.

யாழ்ப்பாணம் வந்திருந்த புனர்வாழ்வு, புனரமைப்புத்துறை அமைச்சின் செயலாளர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் இந்தக் கவலை தரும் தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புச் சம்பந்தமான திட்டங்கள், கொடுப்பனவுகள் எவ்வாறு நடைபெறுகின்றன; எந்த நிலையில் உள்ளன என்பவற்றை நேரில் கண்டும் கேட்டும் அறிந்த பின்னர் அவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

மீளக்குடியமர்தல் நிவாரணப்பணமான இரண்டாயிரம் ரூபாவில் முதற் பகுதியும் இல்லாமல் விடுபட்ட 32 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைப்பது நிச்சயமல்ல. அது சம்பந்தமான கோரிக்கை யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு முன்னரே கிடைத்தது. இப்போது தான் அது பரிசீலனையில் இருக்கிறது என்றும் திரு. லோகேஸ்வரன் கூறியிருக்கிறார்,

வங்கிகளில் பணம் தேங்கிக் கிடப்பதற்கு, நிவாரணப் பணத்தைச் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் கொடுப்பதே பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை இருப்பதன் நிமித்தமே அவை கிழமை நாட்களிலும் நிவாரணப்பணத்தைக் கொடுத்துத் தீர்க்க முடியாமல் இருப்பதாகக் காரணம் காட்டப்படுகிறது.

இந்த நிலைமையை நீக்க அரச அலுவலகங்களில் உள்ள பணக் கொடுப்பனவில் அனுபவம் உள்ள ஊழியரை வங்கிகளில் பணிபுரிய மாற்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிழமை நாட்களிலும் நிவாரணப் பணம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாட்டை முன்னரே செய்திருந்தால் வங்கிகளில் நிவாரணப்பணம் தேங்கிக்கிடக்கும் நிலை வந்திருக்காது அல்லவா? எமது பகுதிகளில் கடமையாற்றும் அதிகாரிகள் நிர்வாகக் கட்டுப்பாடுகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றையே கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் பேர்வழிகள் என்பதால்தான் இவ்வித நிலைமை உருவாகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. அரசாங்க, அரை அரசு, நிறுவனங்களில் சிவப்பு நாடா முறைகளை எழுத்துக்கு எழுத்து அமுல் செய்ய நினைக்கக் கூடாது.

நிவாரணம் போன்ற அவசர வேலைகளுக்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல், கட்டுப்பாடுகள், நியமங்கள், ஒழுங்கு முறைகள் என்ற கோட்டுக்கு அப்பாற் சென்று செயற்பட முன்வர வேண்டும். அவ்வாறு செய்தால் தான் மக்கள் நலன்பேண முடியும் என்று கொழும்பில் உள்ள உயரதிகாரிகளுக்கு இடித்துச் சொல்லும் துணிவும், அவர்களை உடன்பட வைக்கும் திறமையும் இருக்கவேண்டும், நடைமுறை விதிகளுக்கு உட்பட்டுச் செய்யக்கூடியதைச் செய்வோம். எமக்கு ஏன் வீண் சோலி என்ற ஏனோதானோ போக்கு மலிந்தால் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பல நலன்கள் அவர்களுக்குச் சேராமல் போய்விடும். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையாகிவிடும்.

இட்ட பணிக்கு மேலாக, மக்களுக்கு உதவவேண்டும் என்ற சேவை மனப்பான்மை எமது பகுதி அதிகாரிகள், ஊழியர்களுக்கு மிகக் குறைவு என்பதையே 32 ஆயிரம் குடும்பங்களுக்கு 2,000 ரூபா மீளக்குடியமர்தல் நிவாரணம் கிடைக்காமற் போகலாம் என்ற நிலை எடுத்துக் காட்டுகிறது.

நேரத்துக்குத் தக்கபடி ஒரு காரணத்தைக் காட்டித் தாம் தப்பித்துக் கொள்ளும் போக்குடன் அதிகாரிகள் நடந்ததாலேயே பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சாரார் நிவாரணம் பெறமுடியுமோ என்ற சந்தேகக் கட்டம் உருவாக்கி உள்ளது.

இரண்டாயிரம் ரூபா நிவாரணத்தை முதற்தொகுதியினருக்குக் கடந்த வருட நிதி ஆண்டு முடிவதற்கு முன்னரே கொடுத்து முடித்திருந்தால், இரண்டாவது தொகுதியினருக்கு (32 ஆயிரம் குடும்பங்கள்) இப்போதைய நிலை ஏற்பட்டிருக்காது.

கொழும்பு அதிகாரிகள் தாராளமானவர்கள், தமிழ்ப் பகுதிகளுக்கு உதவ வேண்டும், நன்மை செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் என்பதல்ல. ஆனால் பல விடயங்களில் அவர்கள் மீது பழியைச் சுமத்தி அல்லது குற்றஞ்சாட்டி தமது ஊக்கமின்மை, ஆக்கமின்மை, அக்கறையின்மையை எமது பகுதி அதிகாரிகள் மறைத்துவிடப் பார்க்கிறார்கள் என்பதே கவலைக்குரியது.

இந்த நிலை தவிர்க்கப்படவேண்டும். எமது பகுதி அதிகாரிகளிடம் கடமைக்கு வேலை செய்யும், சம்பளத்துக்குப் பணிபுரியும் மனப்போக்குமாறி, மக்கள் சேவை என்று மனம் விரும்பிச் செய்யும் பக்குவம் வரவேண்டும்,

சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி சில முடிவுகளை மேற்கொண்டு செயற்படுத்த இங்குள்ள அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. எடுத்ததற்கு எல்லாம் கொழும்பிடம் அனுமதி பெறவேண்டிய அதிகாரக்கட்டமைப்பு அடியோடு மாற்றி அமைக்கப்படவேண்டும். இதனைச் செய்வது. செய்விப்பது அரசியல் வாதிகளின் பொறுப்பு.

## மஹோற்சவ ஆரம்பம்

யாழ்ப்பாணம் மார்ச். 19

இம்மாதம் 26 ஆம் திகதி வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரஸ்வாமிக்கு மஹோற்சவம் ஆரம்பமாகிறது.

மஹோற்சவ உற்சவங்கள் பகல் 9 மணிக்குள்ளும் இரவு 8 மணிக்குள்ளும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சிகள் யாவும் ஏப்ரல் 13 ஆம் திகதி நிறைவு பெறும். (ச)

மரணவிசாரணை:

## கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 19

திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் இம் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஒருமரண விசாரணைக்கு நூறு ரூபாவாக கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நடந்து சென்று நடத்தப்படும் மரண விசாரணைக்காக மேலதிகமாக பத்து ரூபா வழங்கப்படும்.

எ—ு

## உடுவில் உ. அ. அதிபர்

யாழ்ப்பாணம் மார்ச். 19

வலி-தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபராக திரு. வீரபத்திரபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் நிர்வாக உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய இவரின் நியமன உத்தரவு யாழ்-அரசாங்க செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. (இ - 3)

# வவுனியாவில் மின்சாரமோசடிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

## திடீர் சோதனைகள் மூலம் அபராதம் விதிக்கப்படுகிறது

வவுனியா மார்ச் 19

வவுனியாவில் சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கு எதிரான கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இரண்டு அரிசி ஆலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம்ரூபாவும் தண்டனைக் சட்டணமாக அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இரவு நேரங்களிலும் வவுனியா நகரசபையினர் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

நகரசபை செயலாளர் திரு. இராஜா தணிகாசலம் நேரடியாக பல இடங்களுக்கும் சென்று கண்காணிப்பதுடன் சந்தேகத்திற்குரிய வீட்டு மற்றும் தொழிற்சாலைகள் தொழில்நிலையங்களின் மின்மானிகள், மின்இணைப்புக்கள் என்பவற்றைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இதனிடையில் மின் மானிகளில் பாவனையாளர்கள் மோசடிகளில் ஈடுபடுவதனா சட்டவிரோத மின்பாவனையாலும்வவுனியா நகரசபைக்கு மாதாந்தம் சராசரி 4 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருவதாக சபையின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பலதரப்பட்ட அபிவிருத்தி முறையான பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும், சட்டவிரோத மின்பாவனை மற்றும் மோசடி வேலைகளைக் கைவிட்டு நகரப்பகுதியை நல்ல முறையில் வைத்திருப்பதற்கு ஒத்துழைக்குமாறும் நகரசபை அதிகாரிகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இதே வேளையில் இருண்டு கிடந்த நகரின் பல இடங்களும் குறிப்பாக பஸ்நிலையத்தில் உள்ள பஸ்தரிப்பு மண்டபங்கள், வீதிகள் என்பன இரவு வேளைகளில் ஒளியூட்டப் பட்டுள்ளன. (இ-164)

## சைவசித்தாந்த பீடம்: அமெ. நிதியம் உதவி

யாழ் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த பீடம் உருவாக்க அமெரிக்கத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியம் இரண்டு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

சைவ சித்தாந்தபீடம் உருவாக்க உதவும்படி உப-வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நிதியத்தின் செயலாளர் டாக்டர் சி. பத்மராஜா இத்தொகைக்கான காசோலையை வழங்கியுள்ளார்.

இதேநேரம் இந்துமகாசபையும் 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (ஒ-3

பாணின்

# கட்டுப்பாட்டு விலை நீக்கப்படுமா?

கொழும்பு, மார்ச்19

பாணுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்படுமா?

வாழ்க்கைச் செலவுக் குழுவுக்கு உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள ஆணையாளரும் நியாயவிலை ஆணைக் குழுவும் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றைத் தொடர்ந்து இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

450 கிராம் எடையுள்ள பாணைத் தயாரித்து அதனை 4ரூபா 60 சதத்துக்கு விற்று லாபம் அடைய முடியாத நிலையில் பேக்கரி உரிமையாளர்கள் இருப்பதாக வாழ்க்கைச்செலவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

450 கிராம் பாணை 5 ரூபா 67 சதத்திற்கு விற்றால் பேக்கரி உரிமையாளர் லாபம் பெறுவர் என்று இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அரசுக்குத் தெரிவித்துள்ளது.

4 ரூபா 60சதத்துக்கு சுமார் 300 கிராம் எடையான பாணையே விற்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நியாயவிலை ஆணைக்குழுத் தலைவர் ஜோ. பெரேரா சொன்னதாவது:

'எமது கணக்காளர்கள் இதுபற்றி ஆய்வு ஒன்றை நடத்தினர். அப்போது 450 கிராம் பாணை 4ரூபா 60சதத்துக்கு விற்பது என்பது யதார்த்தபூர்வமற்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டது'

உள்நாட்டுவர்த்தக ஆணையாளர் திருமதி ஜே, சி.பின்னவெல சொன்னதாவது:

'பாணின் விலை அதிகரிக்கப்படவேண்டும் என்ற பேக்கரி உரிமையாளர் கோரிக்கைக்கு நான் சம்மதம் தெரிவித்துள்ளேன்.

இதுபற்றி வாழ்க்கைச்செலவுக் குழுவுக்கு அறிவித்துள்ளேன்'. (இ-எ)

**நினைவில் இன்று**
**19 - 3 - 1990**

★ ஆபிரிக்காக் கண்டத்தை ஆராய்ச்சியாளர் டேவிட் லிவிங்ஸ்டன் பிறந்த தினம்.
பிறப்பு – 19-3,1813
★ புனித வளனார் விழா

## நிவாரணம் வழங்குவதை விரைவுபடுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச். 16

யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் நிவாரணக் கொடுப்பனவுகளையும், வங்கிக் கடன் வழங்கலையும் விரைவுபடுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதென யாழ். செயலகத்தில் நடந்த மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. கே.சி. லோகேஸ்வரனும் கலந்துகொண்டார்.

இதில் வங்கி அதிகாரிகளும், புனரமைப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஒ-3)

### பல்கலைக் கழகத்தில் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ''மகாபொல'' புலமைப் பரிசில் பெறுகின்ற முதலாம் வருட மாணவர்கள் தமது புலமைப் பரிசினை ''பண்டாரகமவில்'' பெற்று வருவது சம்பந்தமாக ஆராயப்பட இருக்கின்றது. என அறிவிக்கப்படுகிறது.

## வட,கிழக்கு நீதிமன்றங்களை இயங்கச் செய்ய ஏற்பாடு

### அதிகாரிகள் குழு வருகிறது

கொழும்பு, மார்ச். 16

வடக்கு—கிழக்கு மாகாண நீதிமன்றங்களுக்கு நீதி அமைச்சு உயர்நிலை அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் விஜயம் செய்யவிருக்கிறது.

கொழும்பில் நீதி அமைச்சு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

நீதிமன்றங்களை மீண்டும் இயங்கச்செய்வது, நீதிமன்றக் கட்டடங்களைப் பார்வையிடுவது ஆகிய பணிகளில் இக்குழு தனது விஜயத்தின் போது ஈடுபடும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## யாழ். றோட்டரிக் கழக பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 19

யாழ். றோட்டரக் கழகத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் கடந்த வெள்ளி யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன

'நொக் அவுட்' முறையிலான இப்போட்டிகளின் இறுதிப் போட்டி நாளை செவ்வாய் மாலை 2, 30 மணிக்கு யாழ் வை. எம். சி.ஏ மண்டபத்தில் நடைபெறும்.

இந்த இறுதிப் போட்டியில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியும், யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் கலந்து கொள்ள இருக்கின்றன.

வெற்றியீட்டிய பாடசாலை பேராசிரியர் ஓதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த,வெற்றிக்கிண்ணத்தைப் பெறும். [இ-ச]

# கவிஞன் எப்போதும் தனது கருத்துப் பலத்தில் நிற்கவேண்டும்

### கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 19

''இலக்கியம் சமுதாயப் பிரச்சனைகளில் இருந்து ஊற்றெடுப்பது இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்டம் தலையெடுத்த காலத்திலும் பௌத்த பேரினைவாதத்திக்கு எதிரான போராட்டம் தலையெடுத்த காலத்திலும் இளைஞன் சார்ள்சின் கவிதைகள் வெளிக்கிளம்பின. நாட்டில் தெரியும் பிரச்சினைகளைப் பற்றிப் பாடியுள்ள இளங்கவிஞன் வார்ள்ஸ் பாராட்டத்தக்கவர்.''

நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற சார்ள்சின் ஏழு கவிதைநூல்கள் அறிமுக விழாவுக்குத் தலைமை வகித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா பேசுகையில் இவ்வாறு கூறினார்.

கவிஞர் இ. [illegible] பேசுகையில், [illegible] படைப்பாளிகளை அனுதாபத்துடன் அணுக வேண்டும் அடியோடு மட்டந்தட்டக் கூடாது. உயர்ந்த கவிதைகள் எப்போதும் எளிமையாகத்தான் இருக்க வேண்டும் என்றார்.

கவிஞர் விவேக் பேசுகையில், சார்ள்சின் கவிதைகளில் 'ஹைக்கட்' வடிவங்கள் இருப்பது பற்றிக் குறிப்பிட்டார்.

செம்பியன் செல்வன் பேசுகையில், ''சுத்தோவிக்க இலக்கியம், சைவ இலக்கியம் என்று பிரித்துப் பாராமல் தமிழ் இலக்கியம் என்று பார்க்கப் பழக வேண்டும்.

நல்ல உரைநடை நல்ல கவிதையைப் போலத்தான் இருக்கும். இளம் வயதில் பல தொகுதிகளைப் போட்ட சார்ள்சின் துணிச்சல் பாராட்டத்தக்கது. அவரது எதிர் [illegible] என்றார்.

[illegible] பேசுகையில், ''யாழ்ப்பாண நூலகம் எரிந்து விடைபெற்ற காட்சியை அணையாத அறிவாலயம் என்ற கவிதை சிறப்பாகச் சொல்கிறது'' என்றார்.

திருவாளர்கள் மு. புஷ்பராஜன், வவுனியா திலீபன் ஆகியோரின் வாழ்த்துரைகள் வாசிக்கப்பட்டன.

திரு. இ. ஜெயராஜ் கருத்துரை வழங்கியபோது, 'கவிதை ஓர் உணர்வு; ஓர் உயர்ந்த அனுபவம். அதிகூடிய சுகானுபவமான விரிவுக்கு இடம் தரும் பொருள் கவிதை.கவிதையில்பொய்மை இருக்காது. கவிதை தூய்மையாக இருக்க வேண்டும். உணர்வின் பிம்பமான கவிஞன் தன்னுடைய கருத்துப் பலத்தில் நிற்க வேண்டும்' என்று கூறினார். (க)

## வாசகர் திருமுகம்

### கடல் தொழிலாளரின் அவல நிலைமை

வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்கம் பாகுபாடு காட்டுகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு பலவகையான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கு வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழில் உத்தியோகத்தர்களின் பாரமுகம் காரணமாக இருக்கலாமோ என சந்தேகிக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் விடயங்களுக்குப் பொறுப்பான உயர்ஸ்தானிகரால் இந்தியாவில் இருந்து மீண்ட அகதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள் போன்றன வழங்கப்பட்டு வருகின்றன.

அதேநேரத்தில், சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு, உடைமைகளை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு எவ்விதநிவாரணமோ உதவியோ வழங்க அரசாங்கமோ தனியார் நிறுவனங்களோ முன்வராமை கவலைக்குரியது.

எனவே எமது பரிதாபகரமான நிலைமையைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

நவராஜன்
புதுக்குடியிருப்பு.

### தீவுப்பகுதி பஸ்சேவை

வடபிரதேசப் போக்குவரத்துச்சபை தீவுப்பகுதி பஸ் சேவைகள் படுமோசமாகிவிட்டன. தீவுப்பகுதியில் இன்று ஒழுங்கற்ற முறையில் ஓடவிடப்படும் 776, 780, 777 பாதை பஸ்களின் சேவைகள் இப்போது கிடைப்பது முயற்கொம்பாகி விட்டது.

மண்டைதீவுக்கான ஒரு பஸ் பல மாதங்களாக ஓடுவதில்லை.

இப்போது புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளிலிருந்து உத்தியோகத்தர், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் போன்றோர் உச்சவேளை பஸ்சேவையின்றிப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். சென்ற மாதத்திலிருந்து இந்த சேவைகளை கோண்டாவில் நிர்வாகம் நிறுத்திவிட்டது.

இப்போது அதிகாலையில் விடப்படும் இரவுத் தங்கல் பஸ்களால் பிரயோசனமில்லை. தகுதியற்ற முறையில் அட்டவணை மாற்றுவதால் மினிபஸ் சேவையாளர்கள் பயன்பெறுவது உண்மை. இ. போ. ச. வேண்டா வெறுப்பான சேவை செய்வது ஏனோ?

ரவி
வேலணை.

## கண்டதும் கேட்டதும்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இச்சம்பவம் நடந்தது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலை பீச் றோட்டில் உள்ள ஒருவருக்கு அவரது மைத்துனர் அவுஸ்திரேலியாவில் இருந்து ஒரு பார்சல் அனுப்பி இருந்தார்.

தபால் திணைக்களத்தின் நடைமுறைக்கு ஏற்ப பார்சலுக்கு உரியவர் அஞ்சல் அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவரது முன்னிலையில் பார்சல் உடைக்கப்பட்டது.

— என்ன ஆச்சரியம்!

தோல் இருக்க சுளை விழுங்கியது போல் பார்சல் உடைக்கப்பட்டதற்கான அடையாளம் எதுவுமே இல்லை. ஆனால் பார்சலுக்குள் இருக்க வேண்டிய கமெராவைக் காணோம். மிகவும் கச்சிதமாக இந்த மோசடி நடத்தப்பட்டிருக்கிறது.

இப்பார்சலுக்கு உரியவர் 820 ரூபா வரிக்கட்டணமாகக் கட்டி இப்பார்சலை இங்கு பெற்றிருந்தாராம்.

இது குறித்து மேலிடத்துக்கு முறையிடப்பட்டிருக்கிறது.

நரி தின்ற கோழி கூவுமா?

செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தி மேற் குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவிகள்:-**

1. கருவிப்பொறிவலர் தரம் II
2. பாதுகாப்பு உத்தியோகத்தர் (தாழ்தரம்)
3. தொழிலாளி(தரம்III)
4. சுகாதாரத் தொழிலாளி (தாழ்தரம்)
5. தொழிலாளி (அமய)

**சம்பளத்திட்டம்:-**

1. கருவிப் பொறிவலர் (தரம் II) ரூபா 1865–11X40–2305 மாதமொன்றுக்கு
2. பாதுகாப்பு உத்தியோகத்தர் (தாழ்தரம்) ரூபா 1775–8X30–2015 மாதமொன்றுக்கு
3. தொழிலாளி (தரம்III) ரூபா 1375–3X30–1465 மாதமொன்றுக்கு
4. சுகாதாரத் தொழிலாளி [தாழ்தரம்] ரூபா 1775–8X30–2015 மாதமொன்றுக்கு
5. தொழிலாளி [அமய] ரூபா 55/– நாளொன்றுக்கு

[இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்.]

**தகைமைகள்**

1. கருவிப்பொறிவலர் (தரம் II)

1. குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. "அமுக்கம் பதிகருவி" போன்ற துல்லிய மானிகளைப் பராமரிப்பதிலும், திருத்துவதிலும் அரசாங்க திணைக்களமொன்றிலோ, அரச கூட்டுத்தாபனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ குறைந்தபட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு: தொழிற்தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு: தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

2. பாதுகாப்பு உத்தியோகத்தர் (தாழ்தரம்)

1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. விளையாட்டிலும் சமூக சேவையிலும் தீவிரமாகப் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.

3. உயரம்; 5 அடி 6 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

மார்பு: சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக்குறையாமல் இருத்தல் வேண்டும்.

4. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

3 உம் 5 உம் தொழிலாளி (தரம் III) தொழிலாளி (அமய)

1. ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

4. சுகாதாரத்தொழிலாளி (தாழ்தரம்)

1. மலசலகூடங்கள் வடிகால்கள் முதலியனவற்றை சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது - 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு; நேர்முகப் பரீட்சை மூலமும் பொதுவுளசார் பறி பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23 X 10 செ மீ. அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஸ்ட உதவிப் பதிவாளர்/ தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

-பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990–03–12

(சி/4057)


## ஏப் 11 இல் பேச்சு

கேப்டவுன், மார்ச் 17 ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர்களுடன் நேரடிப்பேச்சுக்கள் நடத்துவதற்கான திகதியை தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப்: டபிள்யு. டீ. கிளெர்க் நிர்ணயித்திருக்கிறார்.

நெல்சன் மண்டேலா உட்பட ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் தலைவர்களுடன் வருகிற ஏப்ரல் 11 ஆம் திகதி இப்பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# புதுடில்லி அரசியல் நெருக்கடி நிலை நீங்கும் அறிகுறி தென்படவில்லை!

## பிரதமர்சிங் நகரப்புறத்தலைவர் என தேவிலால் கூட்டத்தில் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 18 திரு.தேவிலாலின் ராஜினாமாவால் தேசிய முன்னணி அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நீங்குவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என்று புதுடில்லியில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதனிடையில்நேற்று புதுடில்லியில் நடந்த பொது நிகழ்ச்சி ஒன்றில் திரு. தேவிலால் பங்கு பற்றினார். முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

திரு. தேவிலால் தனது உரையில் பிரதமர் வி.பி.சிங். மீது குற்றஞ்சாட்டினார்.

"இந்திய அரசியலில் நகர்ப்புறத் தலைமைத்துவம் தான் காணப்படுகிறது கிராமங்களில் இருந்து வந்தவர்கள் தேசிய அரசியலில்தலைமைத்துவத்தைப் பெற இடமளிக்கபடவில்லை.

"கிராமங்களுடன்தொடர்பு இல்லாதவர்கள் தான் நாட்டின் தலைமைத்துவத்தில் இன்று இருக்கிறார்கள் அவர்களில் ஒருவராகத் தான் பிரதமர் வி. பி. சிங்கும் இருக்கிறார்.

"என் மீது அவதூறான பிரசாரங்கள் மேற் கொள்ளப்படுவதற்குக் காரணமே நான் கிராமப்புறத்தில் இருந்து அரசியலுக்கு வந்தவன் என்பதேயாகும்.

அதனால் என்மீது அவதூறாப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதை ஜனதாதள் கட்சியின் தலைமையும் அனுமதித்துள்ளது.

"கிராமப்புறத் தலைவர்களுக்கு இராஜதந்திர மற்றும் உயர் நியமனங்கள் வழங்கப்படுமென்றுகூறப்பட்ட உறுதிமொழியை ஜனதாதள் அரசு புறக்கணித்துவிட்டது. இந்த அரசின் ஒரு பிரிவு தான் விரும்பியவர்களுக்கு மட்டுமே நியமனங்களை வழங்கி வருகிறது"

இப்படி திரு தேவிலால் அக்கூட்டத்தில் பேசினார்

இதனிடையில் – 1980 இல் ஜனதா அரசு கவிழ்ந்தது மாதிரி தேசிய முன்னணி அரசு கவிழஇடமளிக்கவேண்டாம் என்று ஜனதாதள் தலைமைப்பீடத்தை பாரதிய ஜனதா தலைவர் எல். கே. அத்வாணி கேட்டுக் கொண்டார். (எ)

## நாளை சுதந்திரம் பெறும் கறுப்பின நமீபியா நாடு

வின்ட்ஹொக், மார்ச் 17 நமீபியா வருகிற 20 ஆம் திகதி நள்ளிரவு சுதந்திரம் பெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டு விட்டன.

ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ்டி. குயிலர், புதிய ஜனாதிபதியான சாம்துஜோமோவுக்கு அன்று விசுவாசப் பிரமாணம் செய்து வைப்பார்.

150 க்கு மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

சுதந்திரநமிபீயாவில் மரண தண்டனை வழங்கும் சட்டம் இருக்காது என்று புதிய அரசியல் சாசனம் கூறுகிறது.

மதசார்பற்ற நடுநிலை நாடாக நமீபியா விளங்கும் என்றும் அரசியல் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்ப்பு

ஸ்ட்ராஸ்போர்க் மார்ச் 18 சிகரெட் விளம்பரங்களுக்கு முற்ற கத்தடை விதிக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளு மன்றம் கோரியுள்ளது.

இந்த யோசனை சில ஐரோப்பிய நாடுகளினதும் சிகரெட் நிறுவனங்களினதும் எதிர்ப்புக்கு இலக்காகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## பதவி விலக தாட்சர் மறுப்பு; தொடரும் செல்வாக்கு வீழ்ச்சி

லண்டன் மார்ச் 17 பிரிட்டனில் தொழில் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக கருத்து. கணிப்புகள் தெரிவிக்கிறது

லண்டன் டெய்லி மெயில் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் கட்சி, ஆளும் கன்சர் வேட்டிவ் கட்சியை விட 25 சதவீத அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதா தெரிய வந்துள்ளது.

இதே வேளை- பிரதமர் பதவியை ராஜனாமாச் செய்ய வேண்டும் என்று ஆளும் கட்சியில் ஒரு பிரிவினர் விடுத்த கோரிக்கையை ஏற்க திருமதி மார்கரட்தாட்சர் மறுத்து விட்டார்.

1992 ஆம்ஆண்டு நடுப்பகுதியில் பிரிட்டனில் அடுத்த பொதுத்தேர்தல் நடைபெற இருக்கிறது. (எ)


## ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக வெளியீடு

ஆசிரியர்; 'ஆத்மஜோதி' நா. முத்தையா

சித்திரை மாதம் முதல் மீண்டும் வெளிவருகிறது!

வருடாந்த சந்தா – ரூபா 60/–
தனிப்பிரதி - ரூபா 5/–

மாவட்ட முகவர்களாக நியமிக்கப்பட விரும்புவோரும் சந்தாதாரரும் உடன்விண்ணப்பிக்கவும்.

குருகுலம்
7ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

[சி–4062]



## மருந்தாளர் தேவை (PHARMACIST)

அண்மையில் யாழ் கே. கே. எஸ் வீதியில் திறக்கப்படவுள்ள Pharmacyக்கு முன் அனுபவமும், திறமையும்முள்ள Pharmacist (மருந்தாளர்) ஒருவர் உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 25 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி/4106)



# TV TRAVELS & TOURIST

★ உடனடி வேலைவாய்ப்பு ★

**SAUDI ARBIA சவுதி அரேபியா**

| | | |
|---|---|---|
| CLEANERS | — | சுத்திகரிப்பாளர்கள் |
| CARPENTERS | — | தச்சுவேலையாட்கள் |
| MASON | — | மேசன்மார் |
| PAINTER | — | பூச்சுனர் |
| PLUMBER | — | பிளம்பர் |
| ELECTRICIAN | — | மின் தொழிலினர் |

வயது 21 – 47 வரை

கடவுச்சீட்டு, 3 படம், அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

**KUWAIT - குவைற்**

CLEANERS — ஆண்கள் 18 – 48
பெண்கள் 25 – 40

★ உடனடிப் பிரயாணம் ★

நோர்வே, சுவிஸ், சுவீடன், டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்ய விரும்புவோர் உடன் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ முக்கிய குறிப்பு: இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் விஸா பெற்றுக் கொடுக்கப்படும்.

**Front of Railway Station,
Brown Road, Kokuvil.**

(சி/4039)



மீண்டும்

## ஓர் அரிய சந்தர்ப்பம்

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான

**S. L. A. S**

(இலங்கை நிர்வாக சேவை)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

Aug மாதமளவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

**விசேட பயிற்சி வகுப்புகள்**

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

**ஆரம்பம்: 25–03–90**

மு. ப. - 9.00 மணி

பாடநெறி:-

கிரகித்தல், நுண்ணறிவு, விடயஆய்வு.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ கட்டணம் ரூபா 150.00 (மாதாந்தம்)
★ இலவச பாடக்குறிப்புகள்

விபரங்களுக்கு:

# ASTAN INSTITUTE

**166/1, Hospital Road,
JAFFNA**

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

[சி–4019]



உ
சிவமயம்

## குருகுலம் சைவப் போதகர் பயிற்சி

மேற்படி மூன்று வருடகால முழுநேரப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் 4 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.
2. 1990 – 04 – 01 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதிருத்தல்;

சலுகைகள்:

1. பயிற்சி இலவசம்
2. வதிவிடமும் உணவும் இலவசம்

நிபந்தனைகள்:

1. மூன்று வருடகாலமும் தொடர்ந்து குருகுலத்தில் வசிக்கவேண்டும்.
2. குருகுல வாழ்க்கை முறையைப் பின்பற்றி ஒழுகவேண்டும்.

முன்னர் பயிற்சி வகுப்புத் தடைப்பட்டதால் பயிற்சியை நிறைவுசெய்யாதவர்கள் விண்ணப்பித்தால் தடையின்றித் தெரிவுசெய்யப்படுவர்.

விண்ணப்பங்கள் பெயர், முகவரி ஆகிய விபரங்களுடனும் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 1990 – 04 – 01 ந் திகதிக்கு முன் நிர்வாகச் செயலாளர், குருகுலம், 7 ம் வாய்க்கால், கிளிநொச்சி என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப் படவேண்டும்.

தலைவர்
கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கம்
குருகுலம்.

[சி-4060]



## கலை வர்த்தகக் கல்லூரி C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 90 காலை வகுப்புகள்**

✶ அளவையியல் ✶

எஸ். எஸ். மனோகரன்

| | | | |
|---|---|---|---|
| பகுதி II | செவ் | — | 6.30 — 7.30 |
| | வியா | — | 6.30 — 7.30 |
| பகுதி I | புதன் | — | 6.30 — 7.30 |
| | வெள்ளி | — | 6.30 — 7.30 |

ஆரம்பம்: 20-03-90
செவ்வாய்க்கிழமை 6.30 a.m.

[சி-4047]



# VICKNA TUITION CENTRE

52, STANLEY ROAD, JAFFNA. Regd. No. 12141

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

✶ A/L கலை, வர்த்தக மீட்டல் ✶ DAY CLASSES (7 00 — 12.00) ✶ ஆரம்பம்:– 19 – 03 – 1990

SATURDAY & SUNDAY (8.00 — 12.00) ஆரம்பம்:– 18 – 03 – 1990

முக்கிய குறிப்பு:
1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.
2. வினா, விடை வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
3. ... ஒவ்வொரு நாட்களும் நடைபெறும்.

[சி-4036]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நஷனல் அக்கடமி

கீரிமலை றோட், பண்டத்தரிப்பு.

7 ஆம், 8 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம் ஆண்டுகளுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன!

வழமையான ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | செல்வி ம. சுப்பிரமணியம் |
| கணிதம் | — | திரு. க. தளையரட்ணம் |
| தமிழ் | — | திரு. சின்னத்தம்பி |
| ஆங்கிலம் | — | திரு. சாமுவேல் |
| சமூகக்கல்வி | — | திரு. வரதன் |
| சமயம் | — | திரு. மனோ |

(2920)



## ★ விலங்கியல் ★

R. ஈஸ்வரதாசன், B. Sc. (Cey.)
21, மணல்தரை லேன், கந்தர்மடம்.

90 A/L பொருளாதார விலங்கியல்
ஆரம்பம்: 21-3-90 புதன் — 4-15 p. m.

90 A/L மீட்டல் வினாவிடை
திங்கள் / புதன் 5-15 p. m

90 A/L வன்கூடு ஆரம்பமாகவுள்ளது.

(C/4110)


## 3rd Death Anniversary



**Mr. K. V. Ramanathan**

(Retired Senior Superintendent of Police)

Passed away on 19-03-87

Fondly remembered and Sodly Missed by wife & Children

48, Colombogam Rd,
Chundikuli, Jaffna.

(2918)

## 100ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**தேவசாந்தி சங்கரப்பிள்ளை**

தோற்றம்: 02 – 02 – 1969          மறைவு: 09 – 12 – 1989

நீ சாதித்தவை அழியுமா மேதினியில்........
கயவர்களால் முடிந்ததா — உன்
காவியத்தை அழிக்க.
காலத்தின் சுவடுகள்
கயவர்களுக்கு பதில் சொல்லும்.

குடும்பத்தினர், உறவினர்,
மைத்துனர்-ஜோண்சன் (பிறான்ஸ்)

கைதடி மேற்கு.          [12114]

# சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில் தெரிவான பயிலுநர் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19 சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் இறுதிப் பட்டியல் வெளியாகியுள்ளது.

தெரிவானவர்கள் விவரம் வருமாறு:

செ. மேரி தியடோசியா - மானிப்பாய், திருமதி கி. விஜயலட்சுமி - ஆனைக்கோட்டை' இ. முகுந்தன் - மானிப்பாய், தி. கலாமதி - ஆனைக்கோட்டை, சு. ஸ்ரீகலா - சுதுமலைவடக்கு, க. சத்தியவதனா - சண்டிலிப்பாய் மேற்கு, ச. மரிய யூடினாலியோனி - மாதகல், இ. மரியகசிலா - இளவாலை, சி. குலசிங்கம் - பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

செ. தயாநாயகி - சில்லாலை, த. தவராஜா - சண்டிலிப்பாய் வடக்கு, திருமதி. மோ. அருந்ததி - மாதகல், மா. கமலலோஜினி - நவாலி, சி. குலமோகன் - பிரான்பற்று, க. குணவதி - ஆனைக்கோட்டை, ஆ. மரிய இமாக்குலேற் சுசிலா - சில்லாலை, ஆ. மே. இ. அல்பிரட் - இளவாலை, ஆ. மேரி சிசிலியா - இளவாலை,

செ. இராஜேஸ்வரி - ஆனைக்கோட்டை, அ. மேரி லேறேற் - மாரீசன்கூடல், ஜோ. கோ. மாலினி - இளவாலை, து. சிவஞானம் - பலாலி கிழக்கு, ம. சகாயராணி - மாதகல், கி. ஜெயந்தி - நவாலி தெற்கு, சி. சத்தியானந்ததேவி - ஆனைக்கோட்டை, ச. இந்துமதி - ஆனைக்கோட்டை, மா. பத்மலோஜினி - நவாலி தெற்கு, அன்ரனி - ஜேக்கப் - இளவாலை, த. இராஜகமலா - மானிப்பாய்.

### இந்து சமயம்

மா. ரவிராஜா - மானிப்பாய், மு. சுசிலாதேவி - சண்டிலிப்பாய் மேற்கு, செசா. மீனலோஜினி - சண்டிலிப்பாய் மத்தி, திருமதி. ப. மகேஸ்வரன் - சண்டிலிப்பாய்.

### றோமன் கத்தோலிக்கம்

வ. சகாயநாயகி - இளவாலை, வண. பிதா. யோ. அ. யேசுதாசன் - இளவாலை, அ. நோ. வியஜகுமாரு - இளவாலை,

### றோமன் கத்தோலிக்கம் அல்லாதது

ச. சத்தியராணி - மானிப்பாய், யே. நீற்றா கமலாதேவி - சண்டிலிப்பாய், க. தங்கராஜா - பண்டத்தரிப்பு,

### தமிழ்

ச. வாசுகிதேவி - மாரிசன்கூடல், செ. தயாபரராணி - சித்திரமேழி, சி. சிவநிதி - பண்டத்தரிப்பு, யோ. மே' டெனி சாந்தினி - இளைவாலை, ச. செபமாலையம்மா - உயரப்புலம்.

### கணிதம்

ந. மலர்விழி - பண்டத்தரிப்பு, சோ. நடராஜா - பண்டத்தரிப்பு.

### விஞ்ஞானம்

தா கண்ணம்மா - பண்டத்தரிப்பு, க. உதயநிலா - இளைவாலை, வே. சிவசக்திவேல் - சண்டிலிப்பாய் மத்தி.

### ஆங்கிலம்

எஸ். வாசுகி தேவி - இளவாலை,

கா. கிருபா - சுதுமலைவடக்கு, செ. விஜயலஷ்மி - உயரப்புலம், ந. ரவிந்திரன் - பண்டத்தரிப்பு, இ. சந்திரவதனி - மாசியப்பிட்டி, க. புவனேஸ்வரி - சுதுமலை வடக்கு ம. ந. ஸ்ரீ சச்சிதானந்தம் - இளவாலை, பெ. தயானந்தன் - சுதுமலை வடக்கு, இ, இந்திரா - சுதுமலை வடக்கு.

### சமூகக்கல்வி

க. சகுந்தலாதேவி - மாதகல் கிழக்கு, இ. நிர்மலாதேவி - மானிப்பாய், நா. கௌசலா - மாரிசன்கூடல், இ. ரோகினி - மாரிசன்

### சித்திரம்

சு. கிருஷ்ணகுமாரி - ஆனைக்கோட்டை, க. சோமேஸ்வரி - சுதுமலைவடக்கு, இ, மதியழகு - மானிப்பாய், இ. நந்தினிதேவி - சுதுமலை தெற்கு, க. ரட்னேஸ்வரன் - மானிப்பாய், ச. ஜிவரஞ்சினி - மானிப்பாய்.

### சங்கீதம்:

சங், சகோ. வெனிஸ்ரா - பண்டத்தரிப்பு, ச, அன்னலஷ்மி - நவாலி, மே. யோ. மேரி ஜக்குலின் விஜலா - யாழ்ப்பாணம், அ. யூனிற்றா மரியகொறற்றி - இளவாலை, கு. சரளா - உயரப்புலம், ம. மஞ்சுளாதேவி - சுதுமலை வடக்கு, கு. சறோஜாதேவி - சண்டிலிப்பாய் வடக்கு.

### நடனம்

ச. யோகானந்தி - சுதுமலை வடக்கு, மா. வி. க. இலங்கையர்கரசி - மாதகல், க. பத்மலோஜினி - பண்டத்தரிப்பு, த. இந்திரா - மாதகல், செ. ராதிகா - மானிப்பாய், து. வசந்தராணி - பண்டத்தரிப்பு, க. நர்மதா - மாரிசன்கூடல், கு. அ. நிர்மலா - சில்லாலை, இ. நிர்மலா - சிதுமலை வடக்கு.

### வாழ்க்கைத் திறன் கல்வி

அ. சாந்தகுமாரி - மானிப்பாய், பா. நளினி - ஆனைக்கோட்டை.

### விவசாயம்

அ. ஜிவலோஜினி - சண்டிலிப்பாய் வடக்கு, அ. மீனலோஜினி - சண்டிலிப்பாய் வடக்கு.

### மனையியல்

ப. பவானி - பண்டத்தரிப்பு, செ. மேரிபுஷ்பராணி - பண்டத்தரிப்பு.

### வர்த்தகம்

க. இ. நித்தியகுமார் - மானிப்பாய் வடக்கு, வி. புனிதவதி - பண்டத்தரிப்பு,

### மரவேலை

அ. பஞ்சமின் - மாதகல்

### சமஸ்கிருதம்

கு. விமலலோயினி - நவாலி தெற்கு,

### சுகாதாரம் உடற்கல்வி

செ. சந்திரகுமாரி - சுதுமலை மத்தி, கு. விமலாதேவி - மாதகல், யோ. சிவசக்தி - ஆனைக்கோட்டை, நா. விஜயசித்திரா - ஆனைக்கோட்டை

### சிங்களம்

சி. ரதி - சண்டிலிப்பாய்.

(இ-9)


## A/L PHYSICS

ஆசிரியர்:

R. சத்தியசீலன்

B. M. C. முன் லேன்,
யாழ்ப்பாணம்.

A/L 90 DAY CLASSES

Monday to Friday

8-30 a.m. ஒலியியல்
9-30 a. m. ஓட்டமின்னியல்

ஆரம்பம்: 19-3-90
திங்கள் காலை 8-30மணி

(C/4112)


## வானொலி நிகழ்ச்சிகள்

### 19-03-1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவநற்சிந்தனை |
| 5.50 | கிறிஸ்தவ நற்சிந்தனை |
| 5.55 | போதிமாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தகசேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தகசேவை |
| 7.30 | பாடசாலைக்கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தகசேவை |
| 8.00 | வாத்தியவிருந்து |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 8.30 | மாதர்மஜ்லிஸ் |
| 9 00 | வர்த்தகசேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | வீணை |
| 11.00 | இசைக்கச்சேரி |
| 12.00 | வர்த்தகசேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தகசேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.15 | பக்திநெறி |
| 6.30 | இசைப்பேருரை |
| 7.00 | நாடகமேடைப் பாடல்கள் |
| 7.03 | அங்கும் இங்கும் செய்திச்சுருள் |
| 7.50 | உலகச்செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப்பாடல்கள் |
| 9.30 | பேச்சு |
| 9.45 | அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு வீணை |
| 10.45 | குரல்வகை |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

## வீதி ஒழுங்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம்.

அத்துடன் தனியார் வாகனங்கள் முட்டாஸ்க்கடைச் சந்தியால் சத்திரச் சந்திக்கு கே. கே. கே. எஸ். வீதியால் செல்லவும் அனுமதிக்கப்படும்.

★ யாழ் நகரில் இருந்து சகலவாகனங்களும் மின்சார நிலைய வீதியால் வந்து வெலிங்டன் சந்தியால் வெளியில் செல்ல அனுமதிக்கப்படும்.

★ கஸ்தூரியார் வீதியான் சுப்பையா கடைச் சந்தியில் இருந்து வின்சர் தியேட்டர் வரையுள்ள பகுதியில் சைக்கிள், மோட்டார்சைக்கிள் மட்டுப்படுத்தப்பட்ட வேகத்தில் நகரத்தில் இருந்து வெளியே வர அனுமதிக்கப்படும். உள்ளேசெல்ல அனுமதிக்கப்படமாட்டாது. கனரக வாகனங்கள் இந்தப் பகுதியில் செல்லமுடியாது.

★ சிவன்கோவிலடியில் இருந்து முட்டாஸ்கடை சந்தி வரை சைக்கிள்களோ, வாகனங்களோ செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. முட்டாஸ் கடைச்சந்தியில் இருந்து வாகனங்கள் சைக்கிள்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படும். மானிப்பாய் வீதியில் இருந்து முட்டாஸ்கடைச் சந்திக்கு வரலாம். ஆனால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

★ சகல லொறிகளும் சத்திரத்துச் சந்திக்கு அருகில் நிறுத்தவேண்டும். ஓட்டோக்கள் வை'வர் வீதி, சுபாஸ் முன்பாகவும், டாக்சிகள் வழமையான இடத்திலும் நிறுத்த வேண்டும்

★ சைக்கிள் குறிப்பிட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் வைக்கப்பட வேண்டும். கண்டகண்ட இடங்களில் நிறுத்தக் கூடாது.

★ பாதசாரிகள் வீதிகளைக் கடக்க உள்ள இடங்களால் மட்டும் கடக்க வேண்டும். கண்ட இடங்களால் கடக்கக் கூடாது.

★ பாடசாலைகள் முன்பாக கடக்க விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

★ கடைகளுக்கு பொருள்களை இறக்கும் லொறிகள் காலை 10 மணிமுதல் 12மணி வரைக்கும், மாலை 2 மணி முதல் 4 மணிவரையே அனுமதிக்கப்படும்.

★ தீவுப்பகுதி மினிபஸ்கள் முற்றவெளி ஊடாக முனீஸ்வரன் வீதிக்கு செல்ல வேண்டும்.

★ ஜும்மா பள்ளி வீதியில் வாகனங்கள் நிறுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ முட்டாஸ்கடை சி. எஸ். கே. சந்திவரை வாகனங்கள் நிறுத்தக் கூடாது.

(ஒ-3)

## ராஜினா---

சினை — என்று திரு. ராம ராவ் சொன்னார்.

பதவி விலகலை தேவிலால் வாபஸ் வாங்கும் விஷயம் குறித்து ஜனதாதள் செயற் குழு அறிக்கை ஒன்றை வெளியிடும் என்று சொல்லப்பட்டது. (அ-எ)

## 6 ஆவது---

பிக்கள் ஆதரவு வழங்கினாலும் மேலும் மூன்று எம். பிக்களின் ஆதரவு தேவை.

நாடாளுமன்றத்தில்நான்கு எம். பிக்களைக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய அறிவிப்பு, ஆளும் கட்சியை ஆறாவது திருத்தத்தை நீக்க முடியாத நெருக்கடி நிலைக்குத் தள்ளியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

(உ)

## 350 கிராம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு நடத்தப்பட்ட உற்பத்தி மதிப்பீட்டின்படி அதே நிறையுள்ள பாணைத் தயாரிக்க 6ரூபா 60 சதம் செலவாறது.

★ தென்பகுதியில் விறகுப் பிரச்சினை, ஊழியர் பிரச்சினை, மூலப் பொருள்களையும் ஏனைய உற்பத்திக்குத் தேவைப்படும் பொருள்களையும் எடுத்துவர ஆகும் போக்குவரத்துச் செலவுப் பிரச்சினை ஆகிய எதுவும் இல்லை.

★ மேலும் 1964ஆம் ஆண்டளவில் ஒரு றாத்தல் கோதுமைமா 35 சதமாக இருந்தபோது பாண் 36 சதமாக விற்கப்பட்டது. பின்னர் ஒருரூபா 08 சதமாக மா விற்கப்பட்டபோது பாண் 1 ரூபா 10 சதமாகவும், ஒரு ரூபா 36 சதமாக மா விற்கப்பட்டபோது பாண் ஒருரூபா 40 சதமாகவும் விற்கப்பட்டது,

★ ஆனால் தற்போது ஒரு றாத்தல் கோதுமைமா 5ரூபா 65 சதமாக விற்கப்படுகிறது. ஆனால் பாணோ 4 ரூபா 60 சதமாக விற்கப்படுகிறது.

இவைபோன்ற பல்வேறு பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. இவைகளை உத்தேசித்தும் அதிகவிலைப்பளுவை நுகர்வோர் மத்தியில் சுமத்தாமலுமே 350 கிராம் நிறையுள்ள பாணை 4 ரூபா 60 சதமாக விற்க அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ-9)

(மூன்றாம் பக்கமும் பார்க்க)

## இறுதி---

நிலவியது - இவ்வாறு ஜெனரல் கல்கத் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய அமைதிப்படை இறுதியாக விலக்கிக் கொள்ளப்படுவதையொட்டி திருகோணமலை சீனக்குடாவில் சிறிய வைபவம் ஒன்றை நடாத்த இந்தியப்படை வட்டாரங்கள் ஏற்பாடு செய்து வருவதாகவும்—

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக கொழும்பு மற்றும் இடங்களிலிருந்து பத்திரிகையாளர்கள் அங்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)


## முக்கிய அறிவித்தல்

## சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

யாழ்ப்பாணம், பெரியகடை வீதி 24/1, ஆம் இலக்கத்தில் இருந்து வந்த எமது கிளை ஸ்தாபனம் கொழும்பு இரண்டாம் குறுக்குத்தெரு, 107 - 111 ஆம் இலக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

★ நம்பிக்கை ★ நாணயம் மிகுந்த ★ உத்தரவாதமான

எமது சேவையை விரும்புவோர் கீழ்க் காணும் விலாசங்களில் எம்மைத் தொடர்பு கொள்க.

| தலைமை செயலகம்: | கொழும்புக் கிளை: |
|---|---|
| 33, முதல் மாடி, | 107-111, இரண்டாம் |
| நியூ ஜெமினி காம்ளக்ஸ், | குறுக்குத் தெரு, |
| 602, மவுண்ட் றோட், | 6 A, இரண்டாம் மாடி, |
| தமிழ்நாடு, | மெட்ரோட்ரேட் சென்ரர், |
| சென்னை 600006, | Super Marker |
| இந்தியா. | கொழும்பு -11 |
| | (HABIB Bank அருகாமையில்) |

போன்: 475382 / [illegible]

[சி-4109]



## அறிவித்தல்

ஞானி என்றழைக்கப்படும் முருகேசு கந்தசாமி ஆகிய நான் வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்மன் தர்மகர்த்தா சபையின் செயலாளர் பதவியிலிருந்து நோய் வாய்ப்பட்ட காரணத்தினால் விலகிக்கொள்கிறேன்.

இதுவரைகாலமும் ஒத்தாசையும் ஒத்துழைப்பும் தந்த மேற்படி தேவஸ்தான கோயில் அர்ச்சகருக்கும், சைவப் பெரியார்களுக்கும், அம்பிகை அடியார்களுக்கும், தர்மகர்த்தாசபைத் தலைவருக்கும், உறுப்பினருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


மேலையப்புலம்,
அளவெட்டிதெற்கு,
அளவெட்டி.
19-03-90.          மு. கந்தசாமி

(C 4064)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்




19 - 03 - 1990 திங்கட்கிழமை

அமைதி காக்க வந்தவர்கள் தாக்குதலுக்கு ஆளாகினர்

# இந்தியப் படையினர் தமது நோக்கத்தில் தோல்வி கண்டனர்

## ஜனாதிபதி பிரேமதாஸ சொல்கிறார்

ஆனைமடு, மார்ச் 19

இலங்கைக்கு வந்த இந்தியப் படையினர் தமது நோக்கத்தில் வெற்றி அடைய முடியவில்லை. அமைதி காக்க வந்தவர்கள் தாக்குதலுக்கு ஆளானார்கள். 1,500 பேர் உயிரிழந்தனர்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.

ஆனைமடுவில் தபாற்கந்தோர் ஒன்றை நேற்று மாலை திறந்து வைத்த பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

வடக்கு — கிழக்குப் பகுதியில் உள்ள போராளிகள் இந்தியாவுக்குச் சென்று இந்தியாவிடம் ஆயுதப் பயிற்சி பெற்றனர். பின்னர் திரும்பி வந்து நாட்டில் யுத்தம் நடத்தினர்.

இந்தக் கட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து இந்தியத் துருப்புக்களையும் இங்கு அழைத்தார்.

இங்கு 65 ஆயிரம் இந்தியப் படையினர் போரிட்டும் அவர்களின் நோக்கத்தில் வெற்றி பெற முடியாது போயிற்று. அமைதி காக்க வந்தவர்கள் தாக்குதலுக்கு உள்ளானார்கள். சுமார் 1,500 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆரம்பத்தில் இருந்தே வெளிநாட்டுத் துருப்புக்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்படுவதை நான் எதிர்த்து வந்தேன்.

எந்தக் கட்டத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் எம்மிடையே வேறுபாடுகளிருப்பினும் வெளிநாட்டுத் துருப்புக்களை அழைப்பது முறையாகாது.

படையை அனுப்பும் நாடோ, படையை வரவழைக்கும் நாடோ இதனால் ஒருலாபமும் அடைவதில்லை.

நான் பதவிக்கு வந்தவுடன் இந்தியப் படையைத் திருப்பி அனுப்புவேன் என்று கூறியிருந்தேன். இதற்கு போராளிகளுடன் புரிந்துணர்வு ஏற்படுதல் அவசியமாக இருந்தது. இதன் காரணமாகவே ஆயுதப் போராட்டத்தை விட்டு பேச்சுக்களுக்கு வருமாறு விடுதலைப் புலிகளை அழைத்தேன்.

தெய்வாதீனமாக முன்னைய இந்திய அரசு எதிர்க்கட்சிகளினால் தோற்கடிக்கப்பட்டது. பதவிக்கு வந்த புதிய அரசு தேர்தல் சமயத்தில் இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பியது தவறு என்று கூறியது'

இவ்வாறு அவர் கூறினார். (அ-எ)

## தரிப்புக்களில் மட்டுமே இனி பஸ்கள் நிறுத்தப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் பஸ் தரிப்பு நிலையத்தை தவிர மற்றைய இடங்களில் இ. போ. ச பஸ்கள் மினிபஸ்கள் நிறுத்தப்படக் கூடாது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள், தனியார் மினிபஸ் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இடத்துக்கு இடம் பஸ்களை நிறுத்துவதால், விபத்துக்கள் ஏற்படக்கூடியசந்தர்ப்பங்கள் அதிகரிப்பதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த கால வன்செயல் சம்பவங்களால் பஸ்தரிப்புக்கள் அழிக்கப்பட்டதால் பஸ் தரிப்பு நிலையங்கள் அமைய வேண்டிய இடங்களில் வீதியில் பஸ் அடையாளங்கள் இடப்படஇருக்கின்றன.

இனிமேல் அந்த இடங்களில் மட்டுமே மினிபஸ்களும் இ.போ.ச பஸ்களும் நிறுத்தப்படும். (ஒ-3)

## நகருக்குவரும் மினிபஸ்கள் முற்றவெளியில் நிறுத்தவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நகரத்துக்கு வரும் சகல மினிபஸ்களும் முற்றவெளியில் நிறுத்தப்படவேண்டும். புறப்படும் நேரத்துக்கு மட்டுமே அந்தந்த இடத்துக்கு வரவேண்டும்.

கொழும்பு செல்லும் மினிபஸ்கள் சிங்களமகாவித்தியாலயத்திற்கு முன்பாக தரித்து நின்றே பிரயாணிகளை ஏற்ற வேண்டும். கொழும்பிலிருந்து வரும் பஸ்கள் ஆஸ்பத்திரிவீதியில் பிரயாணிகளை இறக்கலாம். அதன்பின்னர் சிங்கள மகாவித்தியாலயம் முன்பாகவே அவை தரித்து நிற்க வேண்டும்.

இந்த நடைமுறைகள் நாளைமுதல் அமுலுக்கு வருகின்றன. (இ-3)

## அனுராவின் கண்டனம்; நாளை அரசியல் குழு கூடும்

கொழும்பு, மார்ச் 19

சுதந்திரக்கட்சித்தலைமைப் பீடத்தைக் கண்டித்து திரு. அனுரா பண்டாரநாயக்கா எழுதிய கடிதம் சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவினால் பரிசீலனை செய்யப்பட இருக்கிறது.

இதற்காக அரசியல்குழு நாளை செவ்வாய்க்கிழமை கூடுகிறது என்று கட்சிப் பொதுச் செயலாளர் ஜே. ஆர். பி. சூரியப்பெருமா சொன்னார்.

சுதந்திரக்கட்சித்தலைமைப் பதவிக்கான அடுத்த வாரிசு யார் என்பதைச் சரியாக இனங்காட்ட கட்சியின் தற்போதைய தலைமை தவறிவிட்டது என்று திரு. அனுரா பண்டாரநாயகா தனது கடிதத்தில் குற்றஞ்சாட்டி இருந்தார். (ஓ-எ)

### அன்னை பூபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ளன.

இந்தியப் படையின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்த வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யக் கோரி அன்னை பூபதி மட்டக்களப்பில் உண்ணா நோன்பு இருந்தார் என்பதும் —

1988ஆம் ஆண்டு மார்ச் 19 இல் உண்ணா நோன்பை ஆரம்பித்த அன்னை பூபதி ஏப்ரல் 19ஆம் திகதி உயிர் நீத்தார் என்பதும் தெரிந்தவையே.

இன்றுமுதல் ஒரு மாத காலத்துக்கு தமிழ்ப் பகுதிகளில் நினைவுக் கொண்டாட்டங்களும், நினைவுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

இம்மாதம் முழுவதும் எழுச்சி மாதமாக அனுஷ்டிக்கப்படுவதுடன் அன்னையின் உருவப் பந்தல்கள் அமைக்கப்பட்டு சிரமதான வேலைகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனேக பகுதிகளில் அன்னையின் நினைவாக நினைவுப் பிரசுரங்கள் வெளியிடவும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதங்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இறுதி நாளான ஏப்ரல் 19 ஆம் திகதி வடக்கு, கிழக்கு பகுதிகளில் அன்னைக்குச் சிலைகளைத் திறக்கவும், மாபெரும் நினைவுக் கூட்டங்களை நடத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஓ)

## அமைதிப்படை அதிகாரிகளுக்கு இந்தியத் தூதர் விருந்துபசாரம்

### ஜே. ஆர். ஜெயவர்த்தனாபாராட்டுரை

கொழும்பு, மார்ச் 19

இலங்கையிலிருந்து வெளியேறும் இந்திய அமைதிப் படையின் மூத்த அதிகாரிகளுக்கும் அதன் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கட்டிற்கும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு எல்.எல்.மெஹ்ரோத்ரா நேற்று முன்தினமிரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார்.

அந்த விருந்துபசார நிகழ்ச்சியில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும், பாதுகாப்புதுணை அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன மற்றும் மூத்த இராஜதந்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா - இந்தியப் படை இலங்கையில் புரிந்த சாதனைகளுக்குப்பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தியப்படை விசேட அழைப்பின் பேரில் இங்கு வந்தது என்றும் அவர் சொன்னார்.

### மின்கம்பி....

வெளி புதிய சோனகதெருப் பகுதியில் இடம்பெற்றது.

மீரான் மொஹிதீன் நிசார் (வயது 17), சேகு முகம்மது மொஹிதீன் (வயது 21) ஆகியோரே உயிரிழந்தவர்களாவார்.

வேலணை சரவணையைச் சேர்ந்த கந்தையா தெய்வேந்திரம் என்ற மற்றொருஇளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொம்மைவெளி வீடு ஒன்றில் இருந்த அன்ரனா கம்பியை, நேற்று அப்பகுதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றுக்குக் கொடி கட்டுவதற்காகக் கழற்றிச் சென்றனர் என்றும் —

அதனை நேற்றிரவு மீண்டும் நடமுயற்சித்தபோது அது 11ஆயிரம்வோல்ட் மின் சாரத்தைக் கடத்தும் பாரிய மின்கம்பியின்மீது சரிந்து விழுந்ததாகவும் கூறப்பட்டது. (உ-9)

### பிடிபட்டார் ஆசாமி!

யாழ்ப்பாணம், மார்ச் 19

தட்டாதெரு உப மின் நிலையப் பகுதியில் இரவு நேரத்தில் மின் தடை ஏற்படக் காரணமாக இருந்த ஒரு நபர் பொது மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டார்.

கடந்த நான்கு மாதங்களாக மேற்கண்ட உப மின் நிலையப் பகுதியில் ஓயாமல் இரவு நேரத்தில் மின்தடை ஏற்பட்டு வந்தது.

இதற்கு காரணமாக இருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட ஆசாமி கடந்த வெள்ளிக்கிழமை தமது ''கெட்டித்தனத்தை'' காட்டிக்கொண்டிருந்த வேளை அவரைப் பொது மக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து நையப் புடைத்தனர். (அ - 3)

### மோட்டார்...

இவ்விபத்தில் உயிரிழந்தனர்.

அவர்களது மோட்டார் சைக்கிளுடன் மோதிய மினிபஸ், பின்னர் லொறி ஒன்றுடன் மோதி சேதமுற்றது. இதனால் மினிபஸ்ஸில் வந்த 11பேர் படுகாயமுற்றனர்.

உயிரிழந்த இருவருக்கும் அருகே மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த அவர்களது பெற்றோர்கள் காயம் ஏதுமின்றித் தப்பினர் (உ

### வருகிறது..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது!

மாணவ, மாணவிகள் உட்பட இளைஞர், யுவதிகள் வீதிகளின் குறுக்கே வரிசை போட்டு சைக்கிள்களில் செல்வதால் விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டாகிறது. அதனைக்கருதியே அவ்வாறு ஏற்படுவதால் சைக்கிள் சவாரிகளை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ் டிவகலால, மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ஆகியோர் இவ்விடயம் குறித்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்றைய உதயனின் ஆசிரியத்தலையங்கத்தில், வீதியின் குறுக்கே வரிசை போட்டு சைக்கிள் பிரயாணம் செய்வது குறித்துக் கண்டித்துக் கருத்து வெளியிடப்பட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். (அ-3)

### பி. பி. சி செய்தியாளர் அறையில் தீ!

கொழும்பு, மார்ச் 19

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 10-15 மணியளவில் பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ் நட்டால் தங்கியிருக்கும் ஹோட்டல் அறையில் தீப்பிடித்துக்கொண்டது.

கொழும்பில் ஐந்து ஸ்டார் ஹோட்டல் ஒன்றின் 9ஆவது அறையில் பி. பி. சி. செய்தியாளர் தங்கியிருக்கிறார்.

தீப்பிடித்துக்கொண்ட சமயம் திரு. நட்டால் அறையில் இருக்கவில்லை.

இதற்கானகாரணங்கள்வெளியிடப்படவில்லை.

### காசி யாழ்நகரில்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கவிஞர் காசி ஆனந்தன் நேற்று யாழ் நகருக்கு வந்து சேர்ந்தார்.

கோண்டாவிலில் அமைக்கப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்தின் அமைப்பு வேலைகளை நேற்று அவர் பார்வையிட்டார். (உ-9)

### விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ் கஸ்தூரியார் வீதி- ஆஸ்பத்திரிவீதி சந்தியில் நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் நடந்த விபத்து ஒன்றில் ஒருவர் மரணமானார்.

மோட்டார்சைக்கிள்- மினிபஸ் மோதிய விபத்திலேயே இவர் இறந்தார்.

இறந்தவர் முகமட் அஸீஸ் (வயது 34) என்ற பொம்மைவெளி வாசியாவார். (அ-9)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் அழகரட்னம்

இளைப்பாறிய நிறைவேற்று பொறியியலாளர் P.W.D.
[Highway Rehabilitation Consultancy, Jaffna]

திரு. பொ. அழகரட்னம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற புகையிரத நிலைய அதிபர் பொன்னம்பலம், திருமதி வாலாம்பிகை பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மகனும், இராஜலட்சுமி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக்கணவரும், வினோதினி (இந்துமகளிர் கல்லூரி), விஜிதன் (இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகரட்னம் (விவசாய ஆராய்ச்சியாளர், விவசாயத் திணைக்களம், முருங்கன்), யோகேந்திரன், சரோஜினிதேவி, இந்திராணி, பத்மாதேவி, லலிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீபத்மநாதன், குமாரப்பிள்ளை, சச்சிதானந்தம், சண்முகசுந்தரம், இராஜேஸ்வரன், இராஜகுலசிங்கம், இராஜகுலேந்திரன் (தொலைத் தொடர்புத் திணைக்களம்), இராஜதேவி, காலம்சென்ற இராஜகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று மாலை 3-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:

181, கோவில் வீதி,
நல்லூர்.

பொ. யோகரட்னம்
[12119]

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு சின்னத்தம்பு

[இளைப்பாறிய தபால் அதிபர் - சமாதான நீதவான்]

தெல்லிப்பளை பன்னாலையைச் சேர்ந்த சின்னப்பு சின்னத்தம்பு (இளைப்பாறிய தபால் அதிபர்- சமாதான நீதவான்) 18-03-1990 ஞாயிற்றுக்கிழமை காலமாகியுள்ளார்.

இவர் சோமசுந்தரம் (மருத்துவ தொழில் நுட்பவியலாளர்), மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (அபுதாபி), தவமணிதேவி ஆகியோரின் அருமை மாமனாரும், மகாஜனாக் கல்லூரியில் கல்வி பயிலும் பகிரதன், சிவரதி, கலைச்செல்வி, நளாயினி, பகவதி ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மகாஜனாக் கல்லூரி பேஷர் (Burser), நல்லதம்பி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 19-03-1990 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கீரிமலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

பன்னாலை,
தெல்லிப்பளை.

செ. சிவபாலன்
[12116]

### பொன்னையா நவரட்ணம்

[சட்டத்தரணி]

கொக்குவில் மேற்கு சட்டத்தரணி பொன்னையா நவரட்ணம் 16 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நிர்மலா, மஞ்சுளா (கனடா), சியாமளா (அமெரிக்கா), இந்திரகுமார் (ஜேர்மனி), செந்தில்குமார் (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேந்திரராசா (பொறியியலாளர், தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை, திருகோணமலை), சிவபாலன் (பொறியியலாளர், கனடா), கலாநிதி மகேஸ்வரநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

கேந்திரராசா
[C/4063]

### திருமதி லெட்சுமிஅம்மாள் நாராயணசுவாமி

திருமதி லெட்சுமிஅம்மாள் நாராயணசுவாமி அவர்கள் காலமானார்.

யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலடி 22, ஸ்ரீவெங்கடேசன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற நாராயணசுவாமி அவர்களின் மனைவியும், சிவானந்தன் (இளைப்பாறிய இலங்கை மத்திய வங்கி நிர்வாக அதிகாரி), இராசநாயகம் (சட்டத்தரணி), ஸ்ரீரங்கநாதன் (வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி), காலஞ்சென்ற ஸ்ரீவெங்கடேசன் (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), ஸ்ரீவிவேகானந்தன் (முன்னை நாள் யாழ். ப. நோ. கூ. ச. களஞ்சியப் பொறுப்பாளர்), திருமதி ஜெகதீஸ்வரி விஸ்வநாதன் ஆகியோரின் தாயாரும், திரு. விஸ்வநாதன் (முகாமையாளர், கெமிக்கல் இன்டஸ்றீஸ் கொழும்பு லிமிட்டெட் சிறாப்பர்), திலகவதி, கமலாவதி, சீதாலட்சுமி, ருக்மணி, சீதாதேவி ஆகியோரின் மாமியாரும், பாலக்குமார், பத்மினி, ராஜ்குமார், பிரபாகர், ஜீவகர், உதயசங்கர், ஷியாம்சங்கர், ஜெயந்தி, சுகந்தி, ஆனந்தி, மைதிலி, பாலமுரளி, ராகவன், விஸ்ணுமோகன், கோபிநாத், பிரேம்நாத், பவானி, தேவானந்த், பிரமானந்த், அசோகானந்த், கிருஷ்ணானந்த், சுகுமார், சுமதி ஆகியோரின் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு 1990-03-20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

22, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

ந. விஸ்வநாதன்
[12117]

### செல்வி தங்கராணி பாலசுப்பிரமணியம்

[ஆசிரியை - B.Sc.]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலத்தின் பேரப்பிள்ளையும், திரு. திருமதி பாலசுப்பிரமணியத்தின் மகளும், திரு. பா. சிவசங்கரன், திரு. பா. அருணாசல முதலியார் (கட்டிட பொறியலாளர்), திரு. பா. காசிநாத முதலியார் (சென்னை), செல்வி பா. இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி மனோராணி சிவசங்கரனின் மைத்துனியுமான செல்வி தங்கராணி பாலசுப்பிரமணியம் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-03-1990 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் காலை 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலிவடக்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. அ. பாலசுப்பிரமணியம்
[12118]

நீர்வேலி மத்தி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org